Tamil | தமிழ்



# ஆரம்பப்பள்ளியில் படிப்பைத் தொடங்கத் தயாரா?

உங்கள் குழந்தை தற்போது 5 வயதை எட்டுகின்றபடியால், அவர்களை ஆரம்பப்பள்ளியில் சேர்ப்பது பற்றிச் சிந்திக்க வேண்டிய தருணம் இதுவாகும்.

ஆரம்பப்பள்ளியின் முதல் ஆண்டு அடிப்படைக் கல்வி (ஆயத்தக் கல்வி (Prep)) என்று அழைக்கப்படுகிறது. குழந்தைகள் பள்ளி தொடங்கும் ஆண்டில் ஏப்ரல் 30 ஆம் தேதிக்குள் 5 வயதை எட்டினால் அடிப்படைக் கல்வியைத் (Foundation) தொடங்கலாம்.

6 வயதுள்ள குழந்தைகள் பள்ளிக்குச் செல்வது கட்டாயமாகும்.

## விக்டோரிய அரசின் ஆரம்பப்பள்ளியில் சேர்க்கைப்ம் பதிவு (enrol) செய்து கொள்வது எப்படி

### நீங்கள் விண்ணப்பிக்கும் முன்

- உங்கள் குழந்தை அவர்களின் வயதின் அடிப்படையில் எந்த ஆண்டு பள்ளியைத் தொடங்கலாம் என்பதைக் கணக்கிடவும்
- பள்ளிகளையும் உங்கள் பள்ளி மண்டலத்தையும் பின்வரும் இணையதளத்தில் கண்டறியவும்: **findmyschool.vic.gov.au**
- சுற்றுலா ஒன்றுக்கு முன்பதிவு செய்துகொள்ள ஆரம்பப்பள்ளிகளை முதலாம் பருவத்திலிருந்து தொடர்பு கொள்ளவும் (விருப்பமிருந்தால்).

### எப்படி விண்ணப்பிப்பது

- ஆயத்தக் கல்விக்கான (Prep) விண்ணப்பங்கள் இரண்டாம் பருவத்தின் தொடக்கத்தில் இருந்து வழங்கப்படும்
- ஜூலை மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமைக்குள் உங்கள் விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கவும்
- ஆகஸ்ட் மாதத்தின் முதல் 2 வாரங்களில் பள்ளி உங்களைத் தொடர்பு கொண்டு முடிவைத் தெரிவிக்கும்.

**vic.gov.au/enrolling-foundation-prep** என்ற இணையதளத்தில் மேலும் அறிந்து கொள்ளவும்

The Education State

VICTORIA State Government | Department of Education